# ஊழியர் சேமலாப நிதியம் நன்மைகள் கொடுப்பனவு

ஊழியர் சேமலாப நிதியத்தின் உறுப்பினர் ஒருவர் பின்வரும் சந்தர்ப்பங்களின்போது மட்டும் தமக்கான நன்மைகளைக் கோரி விண்ணப்பிக்க முடியும். அதன்படி உரிய விண்ணப்பப் படிவத்தினை பூரணப்படுத்தி அதற்கு தேவையான ஆவணங்களுடன் தமக்குச் சமீபமாக உள்ள தொழில் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

**01. வயது பூரணமடைவதால் சேவையிலிருந்து விலகுதல்:-**

ஆண் ஒருவராயின் 55 வயதும் பெண் ஒருவராயின் 50 வயதும் பூர்த்தியடைந்து சேவையை விட்டு விலகியிருந்தால், அவர் ஊ. சே. நி. கோர உரிமையுடையவராவர். அவர், விண்ணப்பப் படிவத்துடன் பிறப்புச் சான்றிதழின் மூலப் பிரதியைச் சமர்ப்பித்தல் வேண்டும். பிறப்புச் சான்றிதழ் இல்லாத சந்தர்ப்பத்தில் பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பிக்க முடியும்.

I. தேடுதல் விளைவுக் குறிப்புடன் வயதினை உறுதிப்படுத்தும் ஒரு சத்தியக் கடதாசி
II. நீங்கள் பெருந்தோட்டமொன்றில் வேலை செய்தவராயின், தோட்ட அதிகாரியிடமிருந்து பெற்றுக் கொண்ட அனுமான வயதுச் சான்றிதழ் ஒன்றுடன் வயதை உறுதிப்படுத்துவதற்கான ஒரு சத்தியக் கடதாசி.

**02. திருமணம் நிகழ்ந்ததன் காரணமாகச் சேவையிலிருந்து விலகுதல் (பெண்களுக்கு மாத்திரம்):-**

சேவையிலிருந்து விலகியதன் பின்னர் மூன்று மாதத்திற்குள் திருமணம் முடித்திருத்தல் அல்லது திருமணம் முடித்து ஐந்து வருடங்களுள் சேவையிலிருந்து விலகுதல். விண்ணப்பப் படிவத்துடன் திருமணச் சான்றிதழின் மூலப்பிரதியைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**03. நிரந்தர இயலாமை காரணமாக சேவையை விட்டு விலகுதல்:-**

வைத்திய பரிசோதனையொன்றின் பின்னர் அரசாங்க வைத்தியசாலையினால் வழங்கப்படும் "மருத்துவ 307" படிவமொன்றை அருகில் இருக்கும் தொழில் அலுவலகத்தில் சமர்ப்பித்து அங்கு வழங்கப்படும் M படிவத்தில் தமக்கு தொடர்ந்தும் வேலை செய்ய முடியாது என்பதனை அரசாங்க வைத்தியர் ஒருவரின் மூலம் சான்றுப்படுத்தி K படிவத்துடன் சமர்ப்பிக்க வேண்டும். (விண்ணப்பம் தொழில் ஆணையாளருக்கு கிடைத்ததும் உறுப்பினர் மீண்டும் வைத்திய பரிசோதனைச் சபைக்கு அழைக்கப்பட்டு, சான்றுப்படுத்தப்பட்ட மேற்படி இயலாமை குறித்து உறுதிப்படுத்தப்படும்)

**04. நிரந்தர குடியுரிமை பெற்று இலங்கையை விட்டு வெளிநாடொன்றிற்குச் செல்வதற்காக சேவையை விட்டு விலகுதல்:-**

விண்ணப்பப் படிவத்தினைப் பூரணப்படுத்தி, தற்போது வெளிநாடொன்றில் நிரந்தர குடியுரிமை பெற்றிருப்பதையோ அல்லது நிரந்தர குடியுரிமைக்காகச் செல்வதையோ உறுதிப்படுத்தும் 'வீசா' மற்றும் செல்லுபடியாகும் கடவுச்சீட்டு என்பவற்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.

**05. அரசாங்க சேவையில் நிரந்தர மற்றும் ஓய்வூதியத்துடன் கூடிய தொழில் ஒன்றுக்காகச் செல்லும்போது சேவையிலிருந்து விட்டு விலகுதல்:-**

நியமனக் கடிதத்தின் மூலப்பிரதி, அண்மையில் கொடுக்கப்பட்ட சம்பள விபரம், தற்போது சேவையிலுள்ள திணைக்களத் தலைவரால் ஒரு மாதத்திற்குள் வழங்கப்பட்ட சேவைச் சான்றிதழ், பொலிஸ் அல்லது முப்படைகளில் சேவை செய்பவராயின் சேவையின் நிமித்தம்

வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டை என்பவற்றையும் இவ் ஆவணங்களின் பிரதிகளையும் விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

**06. கூட்டுத்தாபனமொன்று மூடப்படும்போது அல்லது மேலதிக தொழிலாளர்களை நீக்கும்போது சேவையிலிருந்து விலகுதல்:-**

நிறுவனத்தினால் சேவையிலிருந்து நீக்கப்படுபவர்களது பெயர் கொண்ட இடாப்பொன்று தொழில் ஆணையாளருக்கு (ஊ. சே. நி.) வழங்கப்படும் என்பதுடன் சட்டத்தின் 23 ஆம் பிரிவில் உள்ள விடயத்தின்படி தொழில் ஆணையாளரின் அனுமதியுடன் நன்மைகள் கொடுப்பனவு மேற்கொள்ளப்படும். (மேலே குறிப்பிடப்பட்டுள்ள இடாப்பில் விண்ணப்பதாரரின் பெயர் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.)

**சமர்ப்பிக்கப்படவேண்டிய ஏனைய ஆவணங்கள் மற்றும் அறிவுறுத்தல்கள்**

1) "பீ" அங்கத்தவர் படிவம் / படிவங்கள்
2) "பீ" அங்கத்தவர் படிவம் இல்லாத சந்தர்ப்பத்தில் சேவை புரிந்த தொழில் தருநர்கள் ஒவ்வொருவருடமிருந்தும் பெற்றுக் கொண்ட சேவைச் சான்றிதழ், நியமனக்கடிதம், சம்பள அறிக்கை ஆகியவற்றின் மூலம் சேவையை உறுதிப்படுத்த வேண்டும்.
3) தேசிய அடையாள அட்டை, அதன் பிரதியொன்று தொழில் தருநரினால் உறுதிப்படுத்தப்பட்டு சமர்ப்பிக்க வேண்டும்.
4) நன்மைகளை வரவு வைப்பதற்கான வங்கிக் கணக்கு இலக்கம், கிளை, முகவரியைக் காட்டும் வங்கிப் புத்தகத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்று.
5) உங்களது ஊழியர் சேமலாப நிதியத்தின் மிகுதியைப் பிணையாக வைத்து வீட்டுக்கடன் பெற்றுக் கொண்டிருந்தால், அல்லது வீட்டுக்கடனுக்கு விண்ணப்பித்து கடனைப் பெற்றுக் கொள்ளாவிடின்,
    I. கடனைப் பெற்றுக் கொண்டு அதனைச் செலுத்தி முடிக்காவிட்டால் கடன் பெற்றுக் கொண்ட வங்கியின் பெயரும் கணக்கு இலக்கமும் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதுடன் தொழில் அலுவலகத்தின் வீட்டுக்கடன் படிவம் "14" இனைப் பெற்று, பூர்த்தி செய்து உரிய வங்கியிலும் தொழில் அலுவலகத்திலும் உறுதிப்படுத்திச் சமர்ப்பிக்க வேண்டும்.
    II. வீட்டுக் கடனைப் பெற்றுக் கொள்ளவில்லையாயின் குறித்த தொழில் அலுவலகத்தினால் உங்கள் ஊழியர் சேமலாபநிதிக் கணக்கை செயற்படுத்தியதன் பின்னர் விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.
6) அண்மையில் எடுக்கப்பட்ட நிறப்புகைப்படம். ( 3.5 cm × 4.5 cm )
7) இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்படும் வருடாந்த நிதிநிலுவைக் கூற்று அறிக்கை.
8) இலங்கை மத்திய வங்கியினால் குறிப்பிடப்பட்டுள்ள உங்களது பெயருக்கும் ஏனைய ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர்களுக்குமிடையில் வித்தியாசங்கள் இருப்பின், எல்லாப் பெயர்களிலும் குறிப்பிடப்படுவது ஒருவரே என்பதைக் குறித்த தொழில்தருநரால் உறுதிப்படுத்தப்பட்ட அறிக்கை ஒன்றையோ, அல்லது நிறுவனம் மூடப்பட்டிருந்தால் சுயவிபரப் படிவத்தையும், இழப்பீட்டு உத்தரவாதத்தையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
9) நீங்கள் சேவை செய்த நிறுவனம் தற்போது மூடப்பட்டிருந்தால் அல்லது தற்போது தொழிற்படாதிருந்தால் K படிவத்தை பூரணப்படுத்தி நிறுவனம் அமையப்பெற்றுள்ள பிரதேசத்துக்குரிய தொழில் அலுவலகத்தில் சமர்ப்பித்து அந்நிறுவனம் மூடப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்த வேண்டும். அத்துடன் சுயவிபரப் பத்திரமொன்றையும் தொழில் அலுவலகத்திலிருந்து பெற்று கிராம உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலாளர் மூலம் சான்றுப்படுத்தி சமர்ப்பிக்க வேண்டும்.

நன்மைகளுக்கு விண்ணப்பித்தல் தொடர்பாக உங்களுக்கு ஏதேனும் பிரச்சினை இருந்தால் அருகிலுள்ள தொழில் அலுவலகத்திற்குச் சென்று ஆலோசனை பெற்றுக் கொள்ளலாம்.